**DEPOSITION OF WITNESS(CIVIL)**
**IN THE COURT OF I ADDITIONAL JUDGE.**

**Case No. : O.S. No.1190/2011** **Date: 09.04.2026**

**PW- 1.**

Name : **திரு. சங்கர்.**

Father's Name :

Village :

Taluk :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of April 2026.

---

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

என்னுடைய பிறந்த தேதி 07.07.1977. எனக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியும். நான் MCA படித்துள்ளேன். நான் திருச்சி பெரம்பலூர் தந்தை ேஹன்ஸ் ரோவர் கல்லூரியில் 2002 வருடம் படித்து முடித்தேன். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்களை என் அப்பா ஏற்கனவே கூறியுள்ள ஆவணங்களின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன். நான் தற்போது IT நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் முன்பு வியாபாரம் எதுவும் செய்யவில்லை. 2ம் பிரதிவாதி என் அப்பாவின் நண்பர் என்றால் இல்லை. அவர் என்னுடைய அப்பாவின் அப்பா. அவர் எனக்கு தாத்தா. 5ம் பிரதிவாதி முத்தையா முதலியார் என் அப்பாவின் நண்பரா என்றால் அது எனக்கு தெரியாது. 6ம் பிரதிவாதி ராஜவேலு நண்பரா என்றால் அது எனக்கு தெரியாது. அவர் என் அப்பாவின் பங்குதாரர். என் அப்பா, 2 ம் பிரதிவாதி, 5 மற்றும் 6 ம் பிரதிவாதி

ஆகியோர் தங்களுக்கு உரிய பங்கு தொகையை பெற்றுக்கொண்டு கூட்டுப்பங்கு நிறுவனத்திலிருந்து விலகி விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளனர் என்றால் தவறு. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 5ம் பிரதிவாதி முத்தையா முதலியார் எழுதிக்கொடுத்த பிரமாண பத்திரம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய அப்பா கூட்டுப்பங்கு நிறுவனத்திலிருந்து விலகி அதற்குரிய தொகை ரூ.4,15,826.72/- ஐ நான்கு காசோலைகள் மூலம் பெற்றக்கொண்டார் என்றால் இனிசியல் தொகையை கொடுத்தார்கள். பாக்கி தொகையை கொடுக்கவில்லை. என்னுடைய அப்பா பங்கு நிறுவனத்திலிருந்து விலகி கொண்டு அவருடைய தொகை முழுவதையும் பெற்றுக்கொண்டார் என்றும், அதனால் தான் வழக்கில் கணக்கு விவரப்பட்டியலை என் தகப்பனார் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. 12.10.1990 முதல் 15.03.1991 வரை காசோலைகள் மூலமாக என் அப்பா அவருக்குரிய தொகை முழுவதையும் பெற்றுவிட்டார் என்றும், இவ்வழக்கின் பரிகாரம் காலாவதியின் கீழ் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் தவறு. என்னுடைய தகப்பனார் தாக்கல் செய்த வழக்குரையில் என் அப்பாவிற்கும், 2ம் பிரதிவாதி, 5ம் பிரதிவாதி, 6ம் பிரதிவாதி ஆகியோர்கள் காசோலை மூலமாக பங்கு நிறுவனத்திலிருந்து பணம் பெற்றுக்கொண்டனர் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தொகை இனிசியில் தொகை. என்னுடைய அப்பா கூட்டு நிறுவனத்திலிருந்து விலகுவதற்காகதான் மேற்சொன்ன இனிசியல் தொகையை பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். என்னுடைய அப்பா கூட்டுப்பங்கு நிறுவனத்திலிருந்து விலகியதற்கு முழு தொகையையும் பெற்றுக்கொண்டார் என்றும்,

பின்னிட்டு பகுதி தொகையை பெற்றுக்கொண்டார் என்று ஒரு ஆவணத்தை தயார் செய்துள்ளார் என்று சொன்னால் தவறு. வா.சா.ஆ.2 அறிவிப்பு என்னுடைய அப்பா பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு ஆகும். மேற்சொன்ன அறிவிப்பு மூலம் கூட்டுப்பங்கு நிறுவனத்தை கலைக்கவேண்டும் என கேட்டு என் அப்பா அறிவிப்பு அனுப்பியுள்ளார். வா.சா.ஆ.2 அறிவிப்பு 4 வருடம் கழித்து என் அப்பா அனுப்பியுள்ளார் என்றால் மீதி தொகையை என் அப்பாவிற்கு கொடுக்காததால் என் அப்பா அறிவிப்பு அனுப்பியுள்ளார்.

(**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**)

| |
|---|
| Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.<br>Dt. 09.04.2026<br><br>I Addl. District Judge. |